செ.வெ.எண் : 17 / ஜூன் நாள் : 09.06.2017

**இராமநாதபுரம் மாவட்டம்**

**சமூகநலத்துறையின் மூலம் 2017-ஆம் ஆண்டிற்கான சுதந்திர தினவிழா விருதிற்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

சமூகநலத்துறையின் மூலம் 2017 ம் ஆண்டிற்கான சுதந்திர தினவிழா (சிறந்த சமூகப் பணியாளர் (ம) சிறந்த தொண்டு நிறுவனம்) விருதுக்கு பெண்களின் நலன், மேம்பாட்டிற்காக பணிபுரியும் தகுதியான தனிநபர், தொண்டு நிறுவனங்களிடமிருந்து கருத்துருக்கள் வருகிற ஜூன் 15 ஆம் தேதிக்குள் வரவேற்கப்படுகின்றன.

மேலும் விருது வேண்டி விண்ணப்பிப்பவர்கள் தமிழகத்தில் பிறந்தவராகவும், 18 வயது நிரம்பியவராகவும் இருக்க வேண்டும். பெண்குலத்திற்கு பெருமை சேர்க்கும் விதமாக செயல்பட்டிருக்க வேண்டும். தாங்கள் செய்த சேவை குறித்த உரிய விவரங்கள், அத்தாட்சியாக படங்கள் விருது பெற்றிருந்தால் அதுபற்றிய விபரங்களும் தரவேண்டும். பிறந்த தேதி, கல்வித்தகுதி, போன்ற முழு முகவரியுடன், தொலைபேசி எண்களுடன் மாவட்ட சமூகநல அலுவலகத்தில் ஜூன் 15 -ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**